# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் டிசம்பர் மாத சாதாரணக்கூட்டம் **31.12.2018–**ம் தேதி ஆண்டு திங்கள் கிழமை பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற்றது .

தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

குளச்சல் நகராட்சியில் **1999–**ம் வருடம் முதல் ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட நாள்முதல் இந்நாள் வரை நகரமைப்பு பிரிவிற்கென்று, Chainman மற்றும் இருக்கையாளர் பணியிடம் ஏற்படுத்தப்படவில்லை. நகரமைப்பு ஆய்வாளர் தான் அனைத்து பணிகளையும் பார்க்க வேண்டியுள்ளது. நகரமைப்பு ஆய்வருக்கு ஏற்பட்டுள்ள பணிச்சுமையால் நகரமைப்பு பிரிவில் உள்ள கட்டிட வரைபட அனுமதி வழஙகுதல், மனைப்பிரிவு அஙகீகாரம், Delimitation, ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்துதல், அனுமதியற்ற கட்டுமானஙகள் பதிவு செய்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளும் பாதிக்கப்படுகின்றது. மேலும் கட்டிட வரைபட அனுமதி தொடர்பான இடம் நேராய்விற்கு செல்லும் போது Chainman இல்லாததால் இடம் மற்றும் கட்டிடஙகள் அளவீடு செய்வதற்கு நகரமைப்பு ஆய்வாளர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது. எனவே அலுவலக பணியில் தொய்வு ஏற்படா வண்ணம் இருக்கவும், நிர்வாக நலன் கருதியும் நகரமைப்பு பிரிவிற்கு Chainman பணியாளர் 1 எண்ணம் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண். 1785/ 2018 /TPI

**தீர்மானம் எண்.1957 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில், தூய்மை இந்தியா இயக்கம் – சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், ரூ.**178.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும், உரக்கிடஙகு மேம்பாட்டுத் திட்டப்பணிகளில், ரூ.**3.00** இலட்சம் மதிப்பீட்டில், பசுமை வேலி அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் அளித்த மதிப்பீட்டை விட **0.02** குறைவான ஒப்பந்தப்புள்ளிக்கு, நகர்மன்றத் தீர்மானம் எண்.**1451** நாள் : **16/02/2016–**ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு கடந்த **16.02.2016–**ல் பணி உத்தரவு வழஙகப்பட்டது.

ஆனால் மேற்படி பணிக்கான ஒப்பந்தக்காலம் **30** நாட்கள் என்ற நிலையில் ஏனைய திட்டப்பணிகள் அனைத்தும் முடிவுற்று உள்ளதால், பசுமை வேலி அமைக்கும் பணியினை தொடஙகுமாறு நேரிலும், கடிதஙகள் வாயிலாக அறிவுறுத்தப்பட்ட பின்னரும், பணி தொடஙகப்படவில்லை. எனவே திட்டப்பணிகளை உடனடியாக முடித்து உரக்கிடஙகினை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், மேற்படி பணிகளுக்கு பணி முடிவு அறிக்கை மற்றும் நிதி பயனீட்டு சான்று ஆகியவை அனுப்புவதில் கால தாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு, பசுமை வேலி அமைத்தல் பணிக்கு திரு.பாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரருக்கு வழஙகிய பணி உத்தரவு ரத்து செய்து, மேற்படி பணிக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடந்த **16.11.2018–**ல் இறுதி அறிவிப்பு வழஙகப்பட்டது.

ஆனால் மேற்படி இறுதி அறிவிப்பு தொடர்பாக எவ்வித விளக்கமும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பெறப்படாத காரணத்தால், ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்து, முன்வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யவும், திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி பணிக்கு, குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.358/2018/இ1

**தீர்மானம் எண்.1958 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணி புரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் ஆண்கள்–22, பெண்கள்–14 நபர்களுக்கும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஆண்கள்–3, பெண் –1 நபர்களுக்கும், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் –2 ஆண்களுக்கும், மகப்பேறு உதவியாளர் மற்றும் மகப்பேறு ஆயா –2 பெண்களுக்கும் மற்றும் அலுவலக உதவியாளர் ஆண் ஒருவருக்கும் 2018–19–ம் ஆண்டிற்கான சீறுடைகள் நாகர்கோவில் எண்டைஸ் விற்பனை நிலையத்திலிருந்து அரசு விதிமுறைப்படி ஒரு நபருக்கு 2 ஜோடி சீருடைகள் வாங்கி வழஙகவும் அதற்கான தையல் கூலி வழஙகவும் உத்தேச செலவு ரூ.150000/–க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3027/2010/எச்1

**தீர்மானம் எண்.1959 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள நவீன மீன் மார்க்கெட் தரைதளம் கடை எண்.3, வரிவிதிப்பு எண்.148/2007001 திரு.சதீஸ் என்பவர் 01.07.2017–ல் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். ஆனால் மேற்படி கடையை 10/2018–ல் ஒப்படைப்பு செய்து கடைக்கான முன்வைப்புத் தொகை ரூ.132000/–லிருந்து மாத வாடகை நிலுவைத் தொகை ரூ.129800/– போக மீதமுள்ள ரூ.2200/– வழஙகவும், கடையின் உரிமத்தை 12/2018–ல் ரத்து செய்து கடையை மறு ஏலம் விடவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.216/2012/அ1

**தீர்மானம் எண்.1960 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தானியஙகும் குடிநீர் மையஙகள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பிற்பகல் தமிழ் நாளிதழில் 07.12.2018–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில், ரூ.5,292/–ஐ வழஙக கேட்டு பட்டியல் எண்.PP419 / 18–19 நாள் 07.12.2018 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1477/2018/இ1

**தீர்மானம் எண்.1961 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்த அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1909 நாள் 28.09.2018–ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 DBC பணியாளர்களை ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018–ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின் படி 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.38000/–க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.1962 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையம் கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள் மற்றும் நவீன மீன்சந்தை கடைகள் ஆகியவற்றிற்கு 13.12.2018 ஏலத்தின் போது கீழ்காணும் கடைகளுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

| வ.எண் | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண்கள் |
|---|---|---|
| 1 | காமராஜர் பேருந்து நிலைய கடைகள் | 9,17,18,22 முதல் 27 மற்றும் 36 முதல் 39 வரை |
| 2 | கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள் | 38 முதல் 43 மற்றும் 54 முதல் 59 வரை |
| 3 | கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை | 32 |
| 4 | நவீன மீன்சந்தை கடைகள் | 3,4 |

மேற்காணும் கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி கடைகளை மறு ஏலம் விட மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1963 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள தேநீர் கடைக்கு 13.12.2018–ல் பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் இருநபர்கள் கலந்து கொண்டனர். கடைக்கு பொதுஏலம் நடைபெற்ற விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | D.ஜெஸி ஜேனட் | 7000/– | 7000/– (ஜெஸி ஜேனட்) |
| 2 | I.அப்துல் அஜிஸ் | 6900/– | – |

மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை.
வ.எண். (1) கலம் (4)–ல் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ளதால் அதனை ஏற்றுக்கொள்வதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5731/2009/அ1

**தீர்மானம் எண்.1964 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.29–க்கு 13.12.2018–ல் நகராட்சி அலுவலகத்தில் வைத்து பொது ஏலம் நடைபெற்றது. கடையின் ஏலம் நடைபெற்ற விவரம் பின்வருமாறு,

| வ.எண் | கடை எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 29 | I.அப்துல் அஜிஸ் | 3600/– | 3600/–<br>(I.அப்துல் அஜிஸ் |
| 2 | - | D.ஜெசி ஜேனட் | 3500/– | – |

மேற்காணும் கடைக்கு வரிசை எண்.1 கலம் (4) –ல் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்தப்பட்ச ஏலக் கேள்வியை மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.1965 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.10**

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.848/2018/அ2 நாள் 18.12.2018–ன் படி, 2018–19–ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.50,000/– ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி பங்குத்தொகை ரூ.50000/– செலுத்த மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1542/2001/அ1

**தீர்மானம் எண்.1966 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சி கடற்கரை பகுதியில், டச்சு படையுடன் திருவிதாங்கூர் மகாராஜா மார்த்தாண்ட வர்மா அவர்களின் படைகள் போரிட்டு வெற்றி பெற்றதின் நினைவாக சின்னத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 31–ம் நாள் இந்திய இராணுவ படையினரால் போர் வெற்றி நினைவு நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி நிகழ்வானது இந்த வருடம் 31.07.2018 அன்று $19^{th}$ Madras (Carnatic) இராணுவ படையினரால் அனுசரிக்கப்பட்டதை முன்னிட்டு, போர் வெற்றி சின்னம் அமைந்துள்ள பூங்காவில் பராமரிப்பு பணிகள், போர் வெற்றி தொடர்பான விளக்கங்கள் அமைத்தல், சிற்பங்களை அலங்கரித்தல், வர்ணம்ம பூசுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக உத்தேச மதிப்பீடு ரூ.70,000/– க்கு தயார்

செய்து, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணிகளை மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.70,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.949–1/2018/இ1

**தீர்மானம் எண்.1967 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவு ஆகியவற்றில் புதிய கணிணி மற்றும் பிரிண்டர்கள் அமைப்பதற்கு ஏதுவாக, அனைத்து வொர்க் வசதிகள், எலக்ட்ரிக்கல் சுவிட்ச் மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,20,000/–க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1772–1/2018/இ1

**தீர்மானம் எண்.1968 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி ஆணையரின் அலுவலக அறையில் உள்ள கழிவறைக்கு குடிநீர் வினியோக நீருந்து குழாயிலிருந்து (Pumping line) நேரடியாக இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதால், நீரேற்றும் நேரஙகளை தவிர பிற சமயஙகளில் தண்ணீர் வசதி இல்லாத நிலை உள்ளது. எனவே மேற்படி கழிவறைக்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி அமைத்து, தண்ணீர் வசதி செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.14,000/– க்கும், மேற்படி பணியினை குடிநீர் வழுஙகல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1784/2018/இ1

**தீர்மானம் எண்.1969 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு, தமிழ்நாடு சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் :2018–19–ன் கீழ், ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழுஙகப்பட்டது. மேற்படி பணிகளுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரிடம் தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்த வகையில் கீழ்காணும் விவரப்படியான செலவினஙகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | Drainage cross section drawing | 500/– |
| 2 | Road cross section | 500 |
| 3 | Site plan for road in Autocad drawings (7 X 600) | 4200 |
| 4 | A4 Color print (42 x 15) | 630 |
| 5 | A4 Black and White print (6 x 5) | 30 |
| | மொத்தம் | 5860 |

மேற்காணும் செலவினத் தொகை ரூ.5860/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் அதில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1783/2018/இ1

**தீர்மானம் எண்.1970 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்கு, திரு.ஜே.ஜி.பிரின்ஸ், குளச்சல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2018—19—ன் கீழ், ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.2 பாலத்தன்கரை பகுதியில் 2 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல் பணிக்கு 11.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் & முகவரி | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>தட்டாரவிளை, ரீத்தாபுரம் அஞ்சல் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| 2 | திரு.சி.செல்லநாடார்,<br>ஒப்பந்ததாரர்,<br>அணஞ்சிக்கோடு, கருஙகல் அஞ்சல். | மதிப்பீட்டை விட 0.11% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.15% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்தரவி வழஙகியுள்ளதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1553/2018/இ1

**தீர்மானம் எண்.1971 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.16**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை மேல் தளத்தில் மீன் வியாபாரிகள் வசதிக்காக அமைக்கப்பட்ட தண்ணீர் தொட்டி ஒக்கி புயலினால் சேதமடைந்ததால், மீன் விற்பனை செய்யும் இடஙகளை சுத்தம் செய்வதற்கு தண்ணீர் வசதி இல்லாமல் சுகாதார கேடு ஏற்பட்டது. எனவே பொது நலன் கருதி, பழுதடைந்த தண்ணீர் தொட்டிக்கு மாற்றாக புதிய தண்ணீர் தொட்டி அமைப்பதற்காக ரூ.22,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி 15—ன் கீழ், பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.20,925/—ஐ நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து வழஙகியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1453/2018/இ1

**தீர்மானம் எண்.1972 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையஙகளில் நிறுவப்பட்டுள்ள 200 KVA, 62.50KVA, 50 KVA ஜெனரேட்டர்கள் மற்றும் அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 30 KVA ஜெனரேட்டர் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து, மின்தடை காலஙகளில் சீரான குடிநீர் வழஙகவும், மின்தடை நேரஙகளில் அலுவலகப் பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், மேற்படி 4 ஜெனரேட்டர்களிலும் 2019—20—ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார்

செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/—க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.567/2017/இ2

**தீர்மானம் எண்.1973 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில் குத்தகைதாரர் திரு.முகம்மது தாசிம் என்பவர் பெயரில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான குத்தகை இனஙகளுக்கான வைப்புத் தொகைகள் காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி உள்ளது.

| வ.எண் | சேவைமைய பற்று சீட்டு எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1 | 900659 | 25.05.2009 | 5000/— |
| 2 | 900018 | 01.04.2009 | 5000/— |
| 3 | 12785 | 23009.2005 | 15000/— |
| 4 | 1216 | 15.02.2001 | 22000/— |
| | | மொத்தம் | **47000/—** |

மேற்படி காலஙகடந்த வைப்புத் தொகை ரூ.47000/—ல் அன்னார் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.14397/—ஐ ஈடு செய்து மீதம் உள்ள தொகை ரூ.32603/—ஐ வழஙக மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.721/2018/பி1

**தீர்மானம் எண்.1974 அஙகீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் குத்தகைதாரர் திரு.C.ரவீந்திரன் என்பவர் பெயரில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான குத்தகை இனஙகளுக்கான வைப்புத் தொகைகள் காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி உள்ளது.

| வ.எண் | சேவைமைய பற்று சீட்டு எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1 | 6227 | 21.04.2009 | 5000/— |
| 2 | 6660 | 25.05.2009 | 5000/— |
| 3 | 2655 | 23.09.2005 | 15000/— |
| 4 | 2075 | 13.02.2003 | 25000/— |
| | | மொத்தம் | **50000/—** |

மேற்படி காலஙகடந்த வைப்புத் தொகை ரூ.50000/—ஐ இருப்பில் உள்ளதால் மேற்கண்ட தொகையினை திரும்ப வழஙக மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.720/2018/பி1

**தீர்மானம் எண்.1975 அஙகீகரிக்கப்பட்டன.**

## பொருள் எண்.20

இந்நகராட்சியில் குத்தகைதாரர் திருமதி.ஜெயமலர் என்பவர் பெயரில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான குத்தகை இனஙகளுக்கான வைப்புத் தொகைகள் காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி உள்ளது.

| வ.எண் | சேவைமைய பற்று சீட்டு எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1 | 4426 | 11.01.1991 | 3500/– |
| 2 | 4568 | 11.02.1991 | 1480/– |
| 3 | 1268 | 20.02.2001 | 22000/– |
| 4 | 13568 | 16.11.2005 | 10000/– |
| 5 | 806265 | 31.03.2009 | 5000/– |
| 6 | 1201936 | 31.08.2012 | 5000/– |
| | | மொத்தம் | **46980/–** |

மேற்படி காலஙகடந்த வைப்புத் தொகை ரூ.46980/–ல் அன்னார் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.6348/–ஐ ஈடு செய்து மீதம் உள்ள தொகை ரூ.40632/–ஐ வழஙக மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.517/2018/அ1

**தீர்மானம் எண்.1976 அஙகீகரிக்கப்பட்டன.**

## பொருள் எண்.21

இந்நகராட்சியில் குத்தகைதாரர் திரு.எம்.மாகின் என்பவர் பெயரில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான குத்தகை இனஙகளுக்கான வைப்புத் தொகைகள் காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கில் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி உள்ளது.

| வ.எண் | சேவைமைய பற்று சீட்டு எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1 | 12784 | 23.09.2005 | 15000/– |
| 2 | 900658 | 25.05.2009 | 5000/– |
| 3 | 900017 | 31.04.2009 | 5000/– |
| 4 | 1215 | 15.02.2001 | 22000/– |
| | | மொத்தம் | **47000/–** |

மேற்படி காலஙகடந்த வைப்புத் தொகை ரூ.47000/–ல் அன்னார் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவை தொகை ரூ.12960/–ஐ ஈடு செய்து மீதம் உள்ள தொகை ரூ.34040/–ஐ வழஙக மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.719/2018/பி1

**தீர்மானம் எண்.1977 அஙகீகரிக்கப்பட்டன.**

பொருள் எண்.22

இந்நகராட்சி, மீன் மார்க்கெட் கட்டிடத்தின் மேல்தளத்தில் கதவுகள் நிறுவுதல், அலுவலகத்தின் முன் பகுதியில் Sportex Tiles போடுதல், வடக்கு பக்க சுவரில் காங்கிரீட் அமைத்தல், கழிவறையில் பி.வி.சி கதவுகள் போடுதல், அம்மா உணவகத்தின் பக்கப்பாதைகள் சரி செய்தல் மற்றும் வெற்றித்தூண் அருகில் பேவர் பிளாக் தளம் போடுதல் ஆகிய பணிகளை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத் தீர்மானம் எண்.1942 நாள் 31.10.2018–ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் 05.12.2018அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர்<br>கறுக்கன்குழி, திக்கணஙகோடு | மதிப்பீட்டை விட 4.88 %அதிகம் |
| 2 | திரு.எஸ்.சத்தியதாஸ்,<br>ஒப்பந்ததாரர்<br>செம்பொன்விளை | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |
| | | |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று, பணி உத்தரவு வழஙகியுள்ளதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1567–1/2018/இ1

**தீர்மானம் எண்.1978 அஙகீகரிக்கப்பட்டன.**

ஆணையாளர்/தனி அலுவலர்
குளச்சல் நகராட்சி